

FRIDAY SERMON 10-10-2014

# THE HEART – A STUDY (3)

## இதயம் – ஓர் ஆய்வு (3)

*Hazrat Khalifathullah Munir Ahmad Azim (atba)*

உலக மக்கள் அனைவருக்கும் சமாதான வாழ்த்துக்கள் கூறிய பின் தஷஹ்ஹுதும் தஅவுசும் அல்-பாத்திஹாவும் ஓதிக் கொண்டு ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள்இவ்வாறு கூறினார்.

‘‘யா அல்லாஹ் உனக்கு கட்டுப்படுகின்றவனாக என்னை ஆக்குவாயாக! பாவ மன்னிப்பு கோருவதற்காக என் இதயத்தை திறந்து தருவாயாக! உன் பாதுகாப்பு வலையத்திற்குள் என்னை நிலை நாட்டுவாயாக! இதயம் என்ற விஷயத்தின் மூன்றாம் பகுதியினைக் குறித்து பேசுவதற்கான ஆற்றலும் அறிவும் எனக்கு வழங்கிக் கொள்வாயாக! நய வாஞ்சகர்களைத் தவிர்த்து பயபக்தியுடையவர்களுடையவும் உண்மையினைத் தேடி கொள்போர்களுடையவும் இதயங்களுக்கு சொர்க்கத்திலிருந்து பொழியும் பிரகாசத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்துவிடுமல்லவா! அவர்களின் இதயங்களில் துளைத்து செல்லுகின்ற அந்த இறை பிரகாசம் மூலமாகவே இதயத்திற்கு சாந்தியும் நிம்மதியும் கிடைத்து விடுவது. ஆமீன்

எல்லாம் வல்ல அல்லாஹ்வை நினைவு கூறுவதன் வழியாகத் தான் இதயத்திற்கு சாந்தியும் அமைதியும் கிடைப்பது. நம்பிக்கையைப் பலப்படுத்துவதன் வாயிலாகவே அதை எட்ட முடிவது. எல்லாம் வல்ல அல்லாஹ் இப்ராஹீம் (அ) மின் உரையாடலை இவ்வாறு விளக்குகிறான் ‘‘ இப்ராஹீம் கூறிய நேரத்தை நினைத்துப் பாருங்கள். எனது இறைவா! இறந்தவர்களை நீ எவ்வாறு உயிர்ப்பிக்கின்றாய் என்பதை எனக்கு காண்பிப்பாயாக! என கூறிய போது’’ நீர் நம்பிக்கைக் கொள்ளவில்லையா! என அல்லாஹ் கேட்டான். அவர் கூறினார் ஆம் நான் நம்பிக்கைக் கொண்டிருக்கின்றேன் ஆனால் எனது இதயம் அமைதியைப் பெறும் பொருட்டே இவ்வாறு கேட்க்கின்றேன். (2-261)

பொருள் - என் இறைவா! உனது சக்தியால் வெளிப்படும் அடையாளங்கள் என் விழிகளுக்கு காட்சியாளிக்கும் பொழுது என் நம்பிக்கை அதிக ஆற்றலை பெறுகின்றது. ஹஸ்ரத் ஈஸா (அ) மின் தோழர்களின் வேண்டு கோளை எல்லாம் வல்ல அல்லாஹ் இவ்வாறு விளக்குகின்றான். கீழ் கூறுகின்ற வசனத்தின் வாயிலாக அல்லாஹ் அவர்களின் மீது பொழிந்த அருட்களை தெரிவிக்கின்றான்.

‘‘ நாங்கள் அதிலிருந்து புசித்து எங்கள் இதயங்கள் அமையிதியினைப் பெறவும் (5-114) இது மூலாமாக பொருளாக்குவது, எங்கள் மீது அல்லாஹ்வின் அருள்கள் பொழிகின்றதை நாங்கள் காண்பதாக இருந்தால் எங்கள் இதயம் அமைதியைப் பெற்று விடவும் அக்காட்சிகள் வழியாக நாங்கள் திடமுடைய நம்பிக்கையாளர்களாக பரிணமித்து விடவும் செய்வோம்.

பதர் போர் வேளையில் எல்லாம் வல்ல இறைவன் முஸ்லீம்களுக்கு உதவி புரிவதாக கீழ் கூறுகின்ற வசனத்தில் வாக்குறுதி அளித்ததாக காணலாம்.

‘‘உங்கள் இருதயங்கள் நிம்மதியடையவும் ஒரு நல்ல செய்தியாக்வுமே தவிர வேறெதற்க்குமாக அல்லாஹ் அதை செய்ய வில்லை. அல்லாஹ்விடத்தில் அல்லாமல்

வேறு உதவியில்லை. அவன் மிக்க வல்லமையுடையவன். மிகுந்த ஞானமுடையவன்'' (3-127)

ஏனெனில் எதிராளிகளின் எண்ணிக்கையை விட குறைவான எண்ணிக்கை கொண்ட நம்பிக்கையாளர்களின் இதயங்கள் பலவினமடையாமால் இருப்பதற்காகவேயாகும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகின்றன்.''அவர்களுடைய ஈமானுடன் பின்னும் ஈமானை அதிகரித்துக் கொள்வதற்காக மு:.மின்களின் இதயங்களில் அவன் தான் அமைதியும் ஆறுதலும் அளித்தான்'' (48-5).

நம்பிக்கையாளர்களின் ஈமானை மேலும் வலுவடைய செய்வதற்காக எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களின் இதயத்தில் சாந்தியும் சாமாதானமும் ஏற்படுத்துகின்றான். நம்பிக்கையாளர்களின் ஈமானை மேலும் திடப்படுத்துவதன் பலனாக போர் வேளைகளிலும் இன்னல் கட்டங்களிலும் உண்மையை நிராகரிப்பவர்களுக்கு எதிரில் உறுதி வாய்ந்த மனதோடு அவர்கள் நிலைக் கொள்ள வேண்டும் என்பதற்காகும்.

'' அவர்களுடைய இதயங்களில் இருப்பதை அவன் அறிந்து அவர்கள் மீது சாந்தியையும் அமைதியையும் இறக்கியருளி அவர்களுக்கு அண்மையில் வெற்றியையும் அளித்தான்'' (48-19).

''அல்லாஹ்வை நினைவுக் கூறுவதால் அவர்களுடைய இதயங்கள் அமைதி பெறுகின்றன. அல்லாஹ்வை நினைவுக் கூறுவதுக் கொண்டு தான் இதயங்கள் அமைதி பெறுகின்றன என்பதை அறிந்து கொள்வாயாக! (13-29)

அல்லாஹ்வை நினைவுக் கூறும் இதயங்களுக்கு நிம்மதி கிடைக்கின்றது. ஆனால் எல்லாம் வல்ல அல்லாஹ்வை நினைவுக் கூறுவதிலிருந்து விலகி நிற்கும் இதயங்களுக்கு கிடைக்கும் பலன் இன்னல்களும் இடர்பாடுகளும் பயமும் ஆகும். சிலைவணக்கம் செய்போர்களைக் குறித்து அல்லாஹ் கூறுகின்றான்.

''மேலும் அல்லாஹ்வின் பெயர் மட்டும் தனித்தவானாகக் கூறப்பட்டால் மறுமையை ஈமான் கொள்ளதவர்களின் இதயங்கள் சுருங்கி விடுகின்றன.மேலும் அவனை அன்றி மற்றவர்களின் பெயர்கள் கூறப்பட்டால் உடனே அவர்கள் பெரிதும் மகிழ்வடைகின்றார்கள்'' (39-46).

அல்லாஹ்வைக் குறித்தும் அவன் ஏகத்துவத்தைக் குறித்தும் கேட்கின்ற பொழுது அவர்களின் ( உருவ வழிபாடு செய்போர்கள்) இதயங்கள் கொதிப்படைகின்றது. ஆனால் உருவங்களைக் குறித்து கேட்கின்ற வேளையில் அவர்களின் இதயங்கள் ஆனந்தமடைகின்றது. அவர்களின் முகங்கள் அதை வெளிப்படுத்துவதைக் காணலாம்.
உண்மையைப் புரிந்துக் கொண்ட பின் அதை ஏற்றுக் கொள்ள கால தாமதம் ஏற்படுத்துகின்றவர்களுக்கு அல்லாஹ் கடுமையான நிலையில் எச்சரிக்கை விடுத்துள்ளான்.

'' ஈமான் கொண்டோர்களே அவர்களுக்கு அவர்களுடைய இதயங்கள் அல்லாஹ்வையும் இறங்கியுள்ள உண்மையான வேதத்தையும் நினைத்து அஞ்சி நடுங்கும் நேரம் வர வில்லையா! மேலும் அவர்கள் முன்னால் வேதம் கொடுக்கப்பட்டவர்களைப் போல் ஆகி விட வேண்டாம். அவர்கள் மீது நீண்ட காலம் சென்ற பின் அவர்களுடைய இதயங்கள் கடினமாகி விட்டன. அன்றியும் அவர்களில் பெரும் பாலோர் பாஸிக்குகளாக ஆகி விட்டனர்'' (57-17)

ஹஸ்ரத் அப்துல்லா இப்னு மசூத் (ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்கின்றார்.

''இவ்வசனத்தின் அடிப்படையில் அல்லாஹ் விடுத்த கடுமையான எச்சரிக்கைக்கும் அவர்கள் இஸ்லா மதத்தை ஏற்றுக் கொண்டதற்கும் இடையிலான காலயளவு நான்கு வருடமாக இருந்தது''.

அல்லாஹ் கூறுகின்றான். ''உண்மையான மு.ஃ.மின்கள் யார் என்றால் அல்லாஹ்வின் திரு நாமம் அவர்கள் முன் கூறப்பட்டால் அவர்களுடைய இதயங்கள் பயந்து நடுங்கி விடும் அவனுடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டால் அவர்களுக்கு ஈமான் பின்றும் அதிகரித்து விடும் இன்னும் தன் இறைவன் மீது அவர்கள் முற்றிலும் நம்பிக்கை வைப்பார்கள்''. (8-3)

மற்றொரு வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்.

''அல்லாஹ்வை நினைவுக் கூறுவதுக் கொண்டுதான் இதயங்கள் அமைதி பெறுகின்றன என்பதை அறிந்து கொள்க. (13-29)

மேல் குறிப்பிட்டிருக்கின்ற இரண்டு வசனங்களை உட்கொள்வதில் ஒருவருக்கு வருத்தம் உருவாகலாம். ஒரு கட்டத்தில் இறைவனை நினைக்கும் போது பயம் எற்படுகின்றது. மற்றொருக் கட்டத்தில் இறைவனை நினைக்கும் போது மனதிற்கு அமைதி கிடைக்கிறது. ஆனால் அவை இரண்டுக்கும் இடையில் முரண்பாடுகள் எதுவும் இல்லை. இறைத் தண்டனையைக் குறித்து எண்ணுவதனால்தான் பயம் உருவாகுவது. ஆனால் இதயம் அமைதியினை பெறுவது உறுதி வாய்ந்த நம்பிக்கை வாழியாகும். பயமும் எதிர் பார்தலும் ஒரே வசனத்தில் விளக்குகின்றதை கீழ் காண்போம்.

''அல்லாஹ் மிக அழகான விஷயங்களை வேதமாக இறக்கியருளினான். ஒன்றுக் கொன்று ஒப்பானதாகவும் திரும்பத் திரும்ப கூறப்படுவதாகவும் இறைவனுக்கு எவர்கள் அஞ்சுகின்றார்கள் அவர்களுடைய தொலிகள் சிலிர்த்து விடுகின்றன. பிறகு அவர்களுடைய தொலிகளும் இதயங்களும் அல்லாஹ்வின் தயானத்தில் இளகுகின்றன. அதுவே அல்லாஹ்வின் நேர் வழியாகும். அதன் மூலம் தான் நாடியவர்களை அவன் நேர் வழியில் செலுத்துகின்றான். ஆனால் எவனை அல்லாஹ் வழிகேட்டில் விட்டுவிடுகின்றானோ அவனை நேர் வழியில் நடத்துவோர் எவருமில்லை'' (39-24)

அல்லாஹ்வின் தண்டனையைக் குறித்து சிந்திக்கும் போது இதயத்தில் பயம் உருவாகின்றது. அல்லாஹ்வை நினைவுக் கூறுவதில் மகத்தான எதிர் பார்ப்புகள் உடலெடுக்கின்றது. அந்நேரம் பயம் எதிர் பார்ப்புக்கு வழித் திறக்கின்றது. அது வாயிலாக அமைதியுடையவும் சாந்தியுடையவும் பாதையில் வழி நடக்க முடிகின்றது. நம்பிக்கையாளர்களின் இதயங்களில் மட்டுமே அந்த மாற்றம் எற்ப்பாடுகின்றது.

ஒரு நபி வசனத்தில் இவ்வாறு கூறப்பட்டிருக்கின்றது.

''அல்லாஹ்வின் தண்டனையை ஒருவர் பயப்படும் போது அவனது பாவங்கள் யாவும் ஒரு மரத்திலிருந்து உலர்ந்த இலைகள் உதிர்வதைப் போல் உதிர்ந்து வீழ்கின்றது''.

ஹஸ்ரத் ஹத்ததா (ரலி) அவர்கள் கூறுகின்றார்.

''இறை பண்புடைய மனிதர்களின் இயல்புகளைக் குறித்தாகும் இங்கு விளக்குவது. அவர்கள் அல்லாஹ்வின் தண்டனையைப் பயப்படுவர்கள் ஆனால் அல்லாஹ்வை

நினைவுக் கூறுவதினால் இதயம் சாந்தியைப் பெறுகின்றது. அவர்கள் உடல் ஆற்றல்கள் அனைத்தும் இழந்து விடுவார்கள் என்றும் அவர்கள் நிலைமையே மாறிவிடும் என்றும் அல்லாஹ் கூறவில்லை. அவையாவும் புதுப்படைப்புகளும் சைத்தானின் ஆதிக்கவும் ஆகும்''.

கீழ் கூறும் வசனத்தில் அல்லாஹ் தனது அருள் பெற்ற தோழர்களின் நிலையை விளக்குகின்றான்.

''தாங்களின் இறைவன் பால் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற காரணத்தால் அவர்கள் இதயம் அச்சம் கொண்டு தங்களால் முடிவதையனைத்தும் தானம் செய்கின்றார்கள்''.

அவர்கள் நன்மை செய்தனர். அவர்களின் செயல்கள் நிராகரிக்கப்படும் மென்று அவர்கள் பயப்பட்டனர். ஆயிஷா(ரலி) ரிப்போர்ட் செய்திருகின்றார். நான் திரு நபி (ஸல்) விடம் கேட்டனர் ''அல்லாஹ்வின் தூதரே! மேல் கூறிய வசனம் கொண்டு எண்ணப்படுவது, மது அருந்துவதும் தவறான வழியில் செல்வங்களை தன் வசப்படுத்தியவர்களுடையவும் விவகாரத்தைக் குறித்தா? அல்லாஹ்வின் தூதர் பதிலளித்தார். ''சித்திக்கின் புதல்வியே! அவையல்ல அவற்றால் எண்ணுவது. மாறாக நோன்பு நோர்ப்பதும் தான தர்மங்கள் புரிவதும் செய்திருந்தும் தங்களின் செயல்கள் நிராகரிக்கப்படுமே என பயப்பட்டுக் கொள்வோர்களை குறித்தாகும். அவர்களே ஆவர்கள் நன்மையில் முன் செல்கின்றவர்கள்''.

எனது அன்பு சகோதர சகோதரிகளே எனது வெள்ளிக் கிழமை உரையாடல் விஷயம் மிக விரிவானதாகும். அதனால் இன்று இதை நிறைவுப்படுத்துகின்றேன். வருகின்ற வெள்ளிக் கிழமையும் இதே விஷயத்தைப் பற்றி தொடர்ந்து உரையாற்றுவதற்கான தௌபீக் வழங்க இறைவனிடம் நான் மன்றாடுகின்றேன். இன்று ஆற்றிய உரையும் இதே விஷயத்தைக் குறித்து முன்பு நான் ஆற்றிய உரைகளும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவ்வுரையின் வார்த்தைகள் அல்லாஹ்வே இறக்கியதும் இறை மழைப் பொழிகின்றது போல் என்னுள்ளில் பொழிந்துக் கொண்டிருந்ததுமாகும் என்பதில் எவ்வித சந்தேகவும் இல்லை. இவ்வுரைகளை பல மொழிகளில் நூல் வடிவத்தில் வெளியிட எனது தோழர்களுக்கு அல்லாஹ் உதவி புரிவான் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். அது வழி அனைவருக்கும் இது பயனுள்ளதாக மாறி விடும். இன்ஷா அல்லாஹ்.

இன்ஷா அல்லாஹ் இந்த மகத்தான முயற்சியில் அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் அருள் செய்வானாக! உலகனைத்துமுள்ள எனது அன்பு தோழர்களுக்கு அல்லாஹ் உதவி புரிவானாக. இறை மார்க்கத்தில் அவர்கள் மேற்கொள்ளுகின்ற சோதனைகளையும் துன்பங்களையும் எதிர்த்து வெற்றி பெறுவதற்கு அவன் துணை புரிவனாக! இந்த நூற்றாண்டில் இறை வல்லமை மூலமாக அவர்களுக்கு மன நிம்மதி வழங்குவனாக! நிராந்தரமான இந்த சமாதானத்தை இறை உதவியோடு பெற்றுக் கொள்ள அல்லாஹ் அவர்களை ஆயத்தமாக்குவனாக!. ஆமீன்.

**Issued by:**
Jamaat Ul Sahih Al Islam
Dawa Department
Tamil Nadu (Regd.No: A/693)
***Web:*** www.jamaat-ul-sahih-al-islam.com

*Translated by:*
**Azim Ahmad**
**Sadr Sahib'ul Faraj**
Kerala / Tamil Nadu
Cell: 9947181650
9789180817